# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No.23/2024 தேதி- 10.06.2026
(PW.1) – ஜீன் டர்மலா

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-**

1.தற்போது நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் மருதூர்குறிச்சி வசித்து வருகிறேன். பிள்ளைகள் என்னோடு தான் இருக்கிறார்கள் என்றால் சரிதான். நானும், என் பிள்ளைகளும் எப்போது என் கணவர் வீட்டில் இருந்து சென்றோம் என்றால் என் கணவர் இறந்த பிறகு என்னை வீட்டில் இருந்த விரட்டிவிட்டார்கள். என் கணவர் உயிரோடு இருந்த வரை நல்ல முறையில் தான் வாழ்ந்து வந்தோமா அல்லது மனகசப்போடு வாழ்ந்து வந்தோமா என்றால் மனகசப்போடு தான் வாழ்ந்து வந்தோம்.

2. எனக்கு எதிராக அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் என் கணவர் புகார் அளித்தார் என்றால் சரிதான், அது கள்ளத்தனமாக கொடுக்கப்பட்டதாகும். அந்த புகார் 25.02.2021 அன்று கொடுக்கப்பட்டது என்றால் நினைவில் இல்லை. மேற்சொன்ன புகார் நானும், என் குழந்தைகளும் ஸ்டெர்லின் என்பவரோடு சென்றுவிட்டதால் தான் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. என் கணவர் எப்போது இறந்தார் என்றால் 15.07.2023 ல் இறந்தார். அப்போது நான் என் கணவரை பார்ப்பதற்காக சென்றேனா என்றால் சென்றேன், ஆனால் அனுமதிக்கவில்லை, காவல் நிலையத்தில் புகார் அளித்து காவலர்கள் உதவியுடன் சென்றபோதும் அனுமதிக்கவில்லை.

3.நான் என் கணவர் இறப்பிற்கு செல்லவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. என் கணவர் எப்போது சொத்தை விலைக்கு விற்றார் என்றால் தெரியாது. என் கணவர் சொத்தை விற்ற ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்சொன்ன விலை ஆவணம் 17.08.2021 இல் ஏற்படுத்தப்பட்ட விலை ஆவணம் என்றால் சரிதான்.

4.என் கணவர் சொத்தை விற்றுவிட்டு 23.08.2021 ல் இரப்பர் ஷீட் வாங்கி விலைக்கு விற்கும் வியாபாரம் செய்து வந்தார் என்றால் என் கணவர் இறந்த பிறகு தான் சொத்தை விலைக்கு விற்றுவிட்டார் என்ற விவரம் தெரியும். இரப்பர் ஷீட் கடை திறப்பின் போது நான் செல்லவில்லை என்றால் என்னை அழைக்கவில்லை. அதன் பிறகு என் கணவர் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றாரா என்றால் இல்லை. 08.10.2021 ல் என் கணவர் வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றுவிட்டு, அதன் பிறகு 23.09.2022 ல் திரும்ப வந்தார் என்றால் நினைவில் இல்லை.

5.ஆவணங்களின் படி இரப்பர் ஷீட் கடை திறந்ததும், வெளிநாட்டிற்கு சென்றதும், சொத்தை விலைக்கு விற்ற பிறகு தான் நடைபெற்றது என்றால் சொத்தை விலைக்கு விற்ற பிறகு தான் மேற்சொன்ன நடவடிக்கைகள் நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் என் கணவரை விட்டு பிரிந்த பிறகு அவர் 2 1/2 வருடங்கள் உயிரோடு இருந்தார் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில், ஹோமியோ மருத்துவம் மற்றும் ஆறுமுகம் மருத்துவமனையில் சிகிச்சை பார்த்தால் தான் என் கணவர் இறந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

6.நான் என் கணவரின் மருத்துவத்திற்கு எவ்வளவு தொகை செலவு செய்தேன் என்றால் பல இலட்சம் தொகை செலவு செய்தேன். எப்போதில் இருந்து எப்போது வரை செலவு செய்தேன் என்றால் சொல்ல இயலாது. என் கணவர் உடல்நிலை சரியில்லாமல் போன பிறகு அவருடைய தகப்பனார் தென்னிந்தியாவிலேயே சிறந்த மருத்துவமனையான கிம்ஸ் மருத்துவமனையில் என் கணவருக்கு சிகிச்கை மேற்கொண்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

7.என் கணவரின் சிகிச்சைக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.5,00,000/- வரை செலவு செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. என் கணவர் இறக்கும் வரை அவர் நல்ல ஞாபக சக்தியோடு தான் இருந்து வந்தார் என்றால் சரியல்ல, எப்போது மது அருந்தும்

பழக்கம் உண்டு. அதனால் நல்லநிலைமையில் இருந்திருக்க முடியாது. கிறிஸ்தவ மதத்தை தழுவதால் சட்டப்படி வாக்கால் பாகம் ஏற்படுத்த முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஏதும் இந்த வழக்கிற்கு தொடர்புடையதல்ல என்றால் சரியல்ல.